**IN THE COURT OF SPECIAL COURT FOR**
**TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT, TIRUVANNAMALAI.**
**SPECIAL SESSIONS CASE NO.19 OF 2022**
**Deposition of Witness for : PW-4 (LW-4)**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.லிங்கமூர்த்தி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28-07-2026**

Accused present.

**முதல் விசாரணை –**

நான் அரங்கோணம் கோட்டம் நெமிலி வட்டம் , தலைமை நில அளவையராக பணியாற்றி வருகிறேன். நான் செய்யார் வட்டத்தில் தலைமை நில அளவையராக 14.02.2020 முதல் 25.02.20224 வரை பணிபுரிந்தேன். ஆஜர் எதிரி அவருடைய நிலத்தின் பரப்பு திருத்தம் கோரி இணைய வழியில் மனு கொடுத்திருந்தார் . உள் வட்ட அளவையர் மீரா என்பவரிடம் மனுதாரரின் கோரிக்கையானது ஏற்கககூடியதா என்பதை அளந்து அறிக்கை தரும்படி சொன்னேன். நான் அந்த அறிக்கையை பெற்று பரிசீலித்து அதை வட்டாட்சியருக்கு அனுப்பிவைத்தேன் . ஒரு நாள் ஆஜர் எதிரி வந்து என்ன பிராகரஸ் என்று கேட்டார் . என்னுடைய கேபின் தனியாக உள்ளது. ஆஜர் எதிரி பேசிக்கொண்டிருந்தபொழுது அங்கு சவிதா என்பவர் வந்து ஆஜர் எதிரியிடம் ஏன் பொய் புகார் கொடுத்து மன உலைச்சல் ஏற்படுத்துகிறீர்கள் என்று கேட்டார். நான் பரப்பு

திருத்தம் பொறுத்தவரை அடுத்த கட்டத்திற்கு பைல் மூவாகிவிட்டது என்று சொல்லி சவிதாவையும் ஆஜர் எதிரியையும் அனுப்பி வைத்துவிட்டேன் . போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி போலிஸ் விசாரணையில் கூறியதில் இருந்து முற்றிலும் மாறுபட்டு சாட்சியம் அளிப்பதால் அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி , குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் போலிஸ் விசாரணையில் 30.03.2021 ம் தேதி முதலமைச்சர் தனிப்பிரிவில் இணையவழி மூலமாக எருமைவெட்டி குலமந்தை கிராமத்தில் வசிக்கும் ஸ்ரீபதி என்பவர் எண்.55, எருமைவெட்டி கிராமத்தில் புல எண் 87/9A ல் பரப்பு திருத்தம் செய்யகோரி மனு கொடுத்திருந்தார் என்றால் தேதி சரியாக நினைவில்லை . ஆஜர் எதிரி வட்டசார் ஆய்வாளர் சவிதா அவர்கள் மீது காழ்புணர்ச்சி கொண்டு பல உயர் அதிகாரிகளுக்கு அவதூராக மனு அளித்து வருவதும் அவரின் மனுவின் விசாரணைக்கு வட்டசார் ஆய்வாளர் திருமதி .சவிதா அவர்கள் ஆஜராகி விளக்கம் அளித்து வருவதும் எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை . அதனால் மன உலைச்சலுக்கு ஆளாகியதாக வட்டசார் ஆய்வாளர் திருமதி .சவிதா ஸ்ரீபதி என்பவர் மீது புகார் கொடுத்ததின் பேரில் அனக்காவூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவுசெய்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது . இந்த வழக்கு தொடர்பாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்துள்ளார் என்றும், அப்போது நான் நடந்த விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் என்னை விசாரிக்கவில்லை . போலிசார் என்னை விசாரித்தபொழுது நடந்த விவரங்களை சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

என்னிடம் காட்டப்படும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் ஆஜர் எதிரி கோரிய தகவலுக்கு பொது தகவல் அலுவலர் வட்ட துணை ஆய்வாளர் வட்டாட்சியர் அலுவலகம் செய்யாறு வழங்கிய தகவல்கள் என்னால் கையொப்பமிட்டு கொடுக்கப்பட்டவை என்றால் சரிதான் . **மேற்படி தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்**

**கீழ் எதிரிக்கு வழங்கப்பட்ட தகவல்கள் 11 தாள்கள் எ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது** . எதிரி பரப்பு திருத்தம் கொடுத்தது தொடர்பான மனு 08.02.2021 என்றுதான் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது என்று நான் அதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வரிசை எண் .4 ல் எதிரி பரப்பி திருத்தம் தொடர்பாக மனு கொடுத்தது வட்டசார் ஆய்வாளர் திருமதி.சவிதாவிற்கு தகவல் தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . மேற்படி ஆவணத்தில் வரிசை எண்.7 ல் பக்கம் எண்.14,15,16 ல் வட்டசார் ஆய்வாளர் திருமதி.சவிதா என்பவர் கையொப்பமிட்டுள்ளார். மேலும் அதனோடு தன்னுடைய அறிக்கையையும் சமர்பித்துள்ளார் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான் . வரிசை எண் .17 ல் வட்டசார் ஆய்வாளர் திருமதி .சவிதா அவர்களை குறித்து எதிரி எங்கள் அலுவலகத்திற்கு மனுக்கள் எதுவும் அனுப்பியுள்ளாரா என்ற கேள்விக்கு எதிரி பரப்பு திருத்தம் கோரிய மனு மட்டுமே இந்த அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது என்று தகவல் தெரிவித்துள்ளேன் என்றால் அந்த தகவலை வழங்கிய சமயத்தில் வேறு மனுக்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. பரப்பு திருத்தம் தொடர்பாக திருமதி.சவிதா ஆய்வு செய்து அறிக்கை தரவேண்டும் என்றால் சரிதான் . நான் எதிரி கொடுத்த பரப்பு திருத்த மனுவை திருமதி.சவிதாவிடம் கொடுத்தபொழுது அவர் வாங்க மறுத்ததால் தான் நான் மீரா என்பவர் மூலமாக ஆய்வு செய்ய நடவடிக்கை எடுத்தேன் என்றால் சவிதா அவருக்கு வேலை இருப்பதாக சொன்னதால் மீரா என்பவரிடம் கொடுத்தேன் . என்னிடம் காட்டப்படும் நில அளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் மேல்முறையீட்டு அலுவலர் திருவண்ணாமலை என்பவர் வழங்கிய தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்கான பதிலில் வரிசை எண் .6,7,8,9 ல் வட்டசார் ஆய்வாளரின் முக்கிய பணிகள் குறித்து விவரம் கோரியதில் புல தணிக்கை செய்து அறிக்கை சமர்ப்பிப்பது அவருடைய வேலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி மேற்படி ஆவணங்களை பார்வையிட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டார் . மண்டல துணை இயக்குநர் அலுவலகம் நில அளவை பதிவேடுகள் துறை சென்னை அலுவலகத்திற்கு விசாரணைக்கு 12.07.2021 அன்று ஆஜராக எனக்கும் திருமதி.சவிதா என்பவருக்கும் குறிப்பாணை அனுப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் நான் தகவல் வழங்கியுள்ளேன் என்றால் சரிதான் . எங்கள்

அலுவலகத்திற்கு மனு கொடுக்க வருபவர்கள் அங்கு பணிபுரிபவர்களின் ஜாதியை பார்த்து மனு கொடுப்பார்களா, பொதுவாக மனு கொடுப்பார்களா என்றால் பொதுவாகதான் கொடுப்பார்கள். என்னிடம் காட்டப்படும் 28.09.2021 தேதியிட்ட உதவி இயக்குநர் நிலஅளவை பதிவேடுகள் துறை திருவண்ணாமலை அவர்களால் வழங்கப்பட்ட குறிப்பாணையில் வட்டசார் ஆய்வாளர் திருமதி .சவிதா என்பவர் மீதான புகார் தொடர்பான விசாரணை அறிக்கையை எதிர் நோக்கி கோப்பு நிலுவையில் உள்ளது என்று தெரிவித்துள்ளார் என்றால் சாட்சி மேற்படி குறிப்பாணையை பார்த்து அதில் குறிப்பிட்டுள்ளதாக ஒப்புக்கொண்டார்.

**மறுவிசாரணை–** இல்லை

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

V SUTHA Digitally signed by V SUTHA Date: 2026.07.28 18:49:57 +0530

**SESSIONS JUDGE,**
**SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT**
**TIRUVANNAMALAI.**